

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 30th October 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Block Development Office, Arni

* 701 *Q.*—SRI B. DORAISAMI REDDIAR : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, ஆரணி (Block Development) ஆபீஸ் சம்பந்தமாய் அது ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் வருஷாவாரியில் சிப்பந்திகள் சம்பளம் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) மேற்படி ஆபீஸ் மூலமாய் எந்தெந்த கிராமங்களுக்கு எவ்வளவு தொகை எந்தெந்த வகையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) மேற்படி (Development) ஆபீஸர் உபயோகிக்கும் ஜீப்புக்கு எவ்வளவு காலன் பெட்ரோல் வகையரு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

(*a*) 1957–58—Rs. 38,167·72 nP.

1958–59—Rs. 16,294·94 nP.

(1st April 1958 to 31st July 1958.)

(*b*) A statement[a] is placed on the table of the House.

(*c*) 1,007$\frac{3}{4}$ gallons of petrol were consumed for the period 22nd April 1957 to 31st July 1958.

SRI M. JAGANNATHAN : In the statement placed on the Table of the House, I find that under the item ' Stage ' a sum of Rs. 992·81 has been spent. This is not easily understandable. Will the Hon. Minister kindly explain what this item of expenditure is?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு பிரசாரத்திற்காக நாடக அரங்குகள் ஏற்பாடு செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக ஏற்பட்ட செலவு என்று நினைக்கிறேன். அதற்கு மேல் பார்த்தாலே, அதிலிருந்து தெரியவரும். " மியூஸிகல் இன்ஸ்ட்ருமெண்டு ", " ஸ்டேஜ் " என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இந்த ஜீப்புகளை உபயோகப்படுத்துவதில், அவைகளை சொந்த உபயோகத்திற்காக உபயோகப்படுத்துவதினால் அதற்காக பெட்ரோல் செலவழிகிறது என்று புகார்கள் இருக்கின்றன. அப்படியானால் அதை சர்க்கார் தடுக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் புகாருக்கு முழுவதும் ஆதாரம் இல்லை என்று சொல்ல முடியாது. இது அவர்களுடைய நாணயத்தை பொறுத்திருக்கிறது. கூடிய அளவு அதை எந்த அளவுக்கு சரிப்படுத்த முடியுமோ அதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

---

[a] Printed as Appendix I on pages 178–179 infra.